D
V211, 31.7.96
N96.6.3

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 11, தாது-திருவள்ளுவர் ஆண்டு 2027
1996 ஜூலை 26, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்".

உழுதுளைடு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர். ஏனென்றால் மற்றவர்கள் அவர்களைத் தொழுது கொண்டு வாழ வேண்டியிருக்கிறது.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் தலைவரும், 1928 முதல் 1930 வரை நீதிக் கட்சி அமைச்சரவையில் பாராளுமன்றச் செயலாளராகப் பணியாற்றிவரும், பொது நலக் கட்சியின் நிறுவனரும், தென்னக பெருந்தலைவர்களில் ஒருவருமான திரு. எம்.ஏ. மாணிக்க வேலர், தனது 102-வது வயதில் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். 1894-ஆம் ஆண்டு பிறந்த அவர், சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பும், சென்னை சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டமும் பெற்றார். 1926-ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டு வரை அன்றைய வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து, அன்றைய சென்னை சட்டமன்ற மேலவைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1952-ஆம் ஆண்டு முதல்

1962-ஆம் ஆண்டு வரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம் போளூர் மற்றும் துரிஞ்சாபுரம் தொகுதிகளிலிருந்து, முறையே, இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்காலத்தில் வருவாய்த் துறை அமைச்சராகவும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகவும், செயலாற்றியுள்ளார். மேலும், 1962 முதல் 1964 வரை மாநிலங்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி உள்ளார். 1964-ஆம் ஆண்டு மாநில சட்டமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் 1970-ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் தலைவராக அனைவரும் போற்றத்தக்க வகையில் அரும்பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவு குறித்து, அவரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும், பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன். மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

19—

அரசு விதைப்பண்ணை அமைத்தல்

***255—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதியில் அரசு விதைப் பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?